# 4

# காத்திருக்கிற மனத்தாழ்மை

ஆண்டவர் விரும்புகிற தாழ்மையைப்பற்றி இப்போது பார்ப்போம்! மனிதனிடத்திலே தாழ்மை இருக்குமென்றால் அமைதி, சாந்தகுணம் உண்டென்று பார்த்தோம். அந்த அமைதியும், சாந்தமும்தான், வாழ்க்கையின் காரியங்களில் எத்தனைக் காலம், நேரம் எடுத்தாலும் அவனைத் தாழ்மையோடு காத்திருக்க வைக்கும்.

*"கடவுள் ஒவ்வொன்றையும் அதனதன் காலத்தில் செம்மையாகச் செய்கிறார்; காலத்தைப் பற்றிய உணர்வை மனிதருக்குத் தந்திருக்கிறார். ஆயினும், கடவுள் தொடக்கமுதல் இறுதிவரை செய்துவருவதைக் கண்டறிய மனிதரால் இயலாது." (சஉ 3 : 11)*

*"ஒவ்வொன்றுக்கும் ஒரு நேரமுண்டு. உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு காலமுண்டு" (சஉ 3 : 1)*

எவ்வளவு தெளிவாக, இந்த வசனம், கடவுள் என்ன செய்யப்போகிறார் என்பதைக் கண்டறிய, மனிதனால் இயலாது என்று விளக்குகிறது! அதே சமயம் ஒவ்வொன்றுக்கும் ஒரு காலமும் நேரமும் உண்டு என்று விளங்கிக்கொள்ள முடிகிறது!!

அப்படியென்றால், உடன்படிக்கை செய்ய தேர்ந்தெடுக்கப்படுகிற நபர், தன்னுடைய வருங்காலத்திலே நடக்கப்போகிற காரியங்களைக் கண்டறிய முடியாதவனாக இருப்பதினாலேயே, அவன் தாழ்மையோடு, **காத்திருக்கிற உள்ளத்தோடு** அவன் இருக்க வேண்டுமென்பதையே ஆண்டவர் விரும்புகிறார்.

இதை ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்தபின், அவர் இருபத்தைந்து ஆண்டுகள் தன்னுடைய சந்ததிக்காக, ஒரு குழந்தைக்காக காத்திருந்தார் என்று பார்க்கிறோம்!! கடவுள் மனிதனோடு ஓர் உடன்படிக்கையில், ஓர் வாக்குறுதியில் நுழைந்தவுடனாகவும் எதுவும் நடந்துவிடுவதில்லை, அதற்கு பின்பாகவும் நிறைய காத்திருத்தல் இருக்கிறது. ஆக, அந்த வாக்குறுதியைப் பெற்று பல வாக்குத்தத்தங்களை சுதந்தரிக்கக்கூடிய ஒருவன், மனத்தாழ்மையோடு காத்திருக்கவும் தெரிந்திருக்க வேண்டும் என்பது நம் மூதாதையரான ஆபிரகாம் நமக்கு விட்டு சென்ற பாடமாகும்.

இன்னும் ஆழமாக, விவிலியத்தில் நான் இன்னொரு நபரையும்கூட பார்க்கிறேன். சாமுவேல் தீர்க்கதரிசி தாவீதைத் திருப்பொழிவு செய்தபின், தாவீது மன்னர் ஆவதற்குப் பதினைந்து ஆண்டுகள் காத்திருந்தார் என பார்க்கிறோம்!! (2சாமுவேல் 2 : 1 - 5), ஆபிரகாமிற்கும், தாவீதிற்கும், மனத்தாழ்மை இல்லாதிருந்தால், "அன்று என்னோடு பேசின தேவன், எனக்கொரு வாக்குறுதியைக் கொடுத்த தேவன், இன்று என்னை கைநெகிழ்ந்து போனார்" என்றே சொல்லியிருப்பார்கள்! **ஆனால் அவருடைய வாக்குறுதிகள் ஒருபோதிலும் பொய்யாவதில்லையே!!**

அதனால்தான் அவர் மனத்தாழ்மையோடு, காத்திருக்கிற உள்ளம் இருக்கிறவர்களிடத்திலே தான் உடன்படிக்கையும், அவர்களுக்கென்று விசேஷித்த வாக்குறுதிகளையும் கொடுக்க ஆயத்தமாகிறார். ஆமென்!! தாவீதினிடத்திலே மனத்தாழ்மை நிறைய இருந்தது.

*"ஆண்டவர்முன் அமைதியுடன் காத்திரு; தம் வழியில் வெற்றி காண்போரையும் சூழ்ச்சிகள் செய்வோரையும் பார்த்து எரிச்சல் கொள்ளாதே." (திபா 37 : 7)*